# TNPSC GROUP I TEST BATCH 2025
# TEST III – INDIAN POLITY - II (SCHOOL BOOK BASED)

1. Consider the following with regard to the Electoral Process in India
   1. Notification of the Election.
   2. Delimitation of Constituencies.
   3. Notification by the election commission regarding Nomination and Withdrawal.
   4. Filing of nomination papers by the intending candidates.

   Which one of the following is the correct Chronological sequence of the above statements?

   a. 2-3-1-4 b. 1-2-3-4 c. 2-1-3-4
   d. 2-3-4-1 e. Answer not knownn

   இந்தியாவில் தேர்தல் செயல்முறை குறித்த காலவரிசையை தேர்வு செய்
   1. தேர்தல் அறிவிப்பு
   2. தொகுதிகளை மறுவரையறை செய்தல்
   3. வேட்பு மனு தாக்கல் மற்றும் திரும்பப் பெறுதலைப் பற்றிய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு.
   4. போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்தல்

   a. 2-3-1-4 b. 1-2-3-4 c. 2-1-3-4
   d. 2-3-4-1 e. விடை தெரியவில்லை

2. With reference to the First General Election in India, Consider following statements:
   1. The first General election of 1951-1952 elected the First Loksabha.
   2. The Congress has won 354 out of 489 Loksabha Seats.
   3. The CPI was the Second Party with 16 seats.
   4. The voter turnout was 57.6% and 54 political parties had contested to election.

   Which of the statement given above is/are correct?

   a. 1, 2, 3 and 4 b. 1, 3 and 4 c. 1 and 4 only
   d. 1 and 3 only e. Answer not knownn

   இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலைப் பற்றி, பின்வரும் கூற்றுகளை ஆய்க
   1. 1951-1952ஆம் ஆண்டில் முதல் பொதுத்தேர்தல் நடைபெற்று முதலாவது மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்டது.
   2. மொத்தமுள்ள 489 மக்களவை இடங்களில் காங்கிரஸ் கட்சி 354 இடங்களில் வெற்றி பெற்றது.
   3. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 16 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாமிடம் பெற்றது.
   4. இத்தேர்தலில் 57.6 சதவீத வாக்குப்பதிவு நடைபெற்றது மற்றும் 54 கட்சிகள் போட்டியிட்டன.

   மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எவை சரியானது?

   a. 1, 2, 3 மற்றும் 4 b. 1, 3 மற்றும் 4 c. 1 மற்றும் 4 மட்டுமே
   d. 1 மற்றும் 3 மட்டுமே e. விடை தெரியவில்லை

3. With reference to Election in India, consider the following information:
   1. The Delimitation Commission have been set up four times – 1952, 1963, 1973 and 2002.
   2. There was no delimitation after the 1981 and 1991 census.
   3. The Representation of people act was passed in 1951.

   Which of the information given above is/are correct?

   a. 1 only b. 1 and 3 only c. 1, 2 and 3 only
   d. None of these e. Answer not known

   இந்திய தேர்தல்கள் குறித்த பின்வரும் கூற்றுகளை ஆய்க
   1. தொகுதி மறுவரையறை ஆணையம் இதுவரை நான்கு முறைகள் அமைக்கப்பட்டது – 1952, 1963, 1973 மற்றும் 2002
   2. 1981 மற்றும் 1991 மக்கள்தொகை கணக்கெடுப்பை பின்பற்றி தொகுதி மறுவரையறை செய்யப்படவில்லை
   3. மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951இல் இயற்றப்பட்டது

   சரியான கூற்றுகளை கண்டறிக

   a. 1 மட்டும் b. 1 மற்றும் 3 மட்டும் c. 1, 2 மற்றும் 3 மட்டும்
   d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

4. With Reference to the First Past The Post (FPTP) system, consider the following statement.
   1. FTPT systems are found primarily in France.
   2. The winning candidate is the one who gain more votes than any other candidates.
   3. The voters vote for candidates rather than political parties
   4. India follows first past the post system in election.

   Which of the statement given above is/are correct?

   a. All the above b. 2 and 4 only c. 2, 3 and 4 only
   d. 3 and 4 only e. Answer not known

   அதிக வாக்குகள் பெற்றவர் வெற்றி பெற்றவர் என்று அறிவிக்கும் முறை (FPTP) குறித்த பின்வரும் கூற்றுகளை ஆய்க
   1. FPTP முறை முதன் முதலில் பிரான்சில் அறிமுகப்படுத்தப்பட்டது
   2. மற்ற வேட்பாளர்களை விட அதிக வாக்குகள் பெற்ற வேட்பாளர் வெற்றி பெற்றவராக கருதப்படுகிறார்
   3. வாக்காளர்கள் அரசியல் கட்சிகளை விட வேட்பாளர்களுக்கே அதிகம் வாக்களிக்கின்றனர்
   4. இந்தியா FPTP முறையை பின்பற்றுகிறது

   சரியான கூற்றுகளை கண்டறிக

   a. மேற்கூறிய அனைத்தும் b. 2 மற்றும் 4 மட்டும் c. 2, 3 மற்றும் 4 மட்டும்
   d. 3 மற்றும் 4 மட்டும் e. விடை தெரியவில்லை

5. Which of the following statements about the principles underlying Election in India is/are correct?
   1. Election should be based on universal Adult suffrage.
   2. No provision for communal representation.
   3. A person can be registered as a voter in more than one constituency.
   4. Reservation of seats for SC/ST in Loksabha.

   a. 1, 2 only b. 1, 2 and 4 only c. 1, 2 and 3 only
   d. 3 only e. Answer not known

இந்திய தேர்தல் முறையில் பின்பற்றப்படும் கொள்கைகள் குறித்த பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானவை?

1. வயது வந்தோர் வாக்குரிமை முறை தேர்தலில் பின்பற்றப்படுகிறது
2. வகுப்புவாத பிரதிநிதித்துவம் இடம்பெறவில்லை
3. ஒரு நபர் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளில் வாக்காளராக பதிவு செய்து கொள்ளலாம்
4. மக்களவையில் SC/ST பிரிவினருக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது

a. 1, 2 மட்டும் b. 1, 2 மற்றும் 4 மட்டும் c. 1, 2 மற்றும் 3 மட்டும்
d. 3 மட்டும் e. விடை தெரியவில்லை

6. Which of the given statement on electoral system in India is/are correct?
   1. State funding of election was recommended by Tarakunde Committee
   2. The list of Eligible voters is called as polling roll
   3. Election due to death or resignation of a member is through By-election
   4. Psephology is the study of Election

   a. 1 and 2 only b. 2 and 3 only c. 1 and 4 only
   d. 3 and 4 only e. Answer not known

   இந்தியாவில் பின்பற்றப்படும் தேர்தல் முறைகள் குறித்த கூற்றுகளில் எது / எவை சரியானவை?

   1. தேர்தலுக்கான மாநில நிதியை தார்குண்டே குழு பரிந்துரைத்தது
   2. தகுதியான வாக்காளர்களின் பட்டியல் வாக்குப்பதிவு என அழைக்கப்படுகிறது
   3. இறப்பு அல்லது உறுப்பினர் ராஜினாமா செய்யும் காரணத்தினால் இடைத்தேர்தல் நடத்தப்படுகிறது
   4. செ∴பாலஜி என்பது தேர்தல் பற்றிய அறிவியல்

   a. 1 மற்றும் 2 மட்டும் b. 2 மற்றும் 3 மட்டும் c. 1 மற்றும் 4 மட்டும்
   d. 3 மற்றும் 4 மட்டும் e. விடை தெரியவில்லை

7. With regard to Rajamannar Commission report which among the following is/are correct?
   1. It proposed that the inter-state council (article 263) must consist of the chief minister of the states and prime minister as the chairperson.
   2. It recommended the elimination of articles 256, article 257 and Article 339 (2) from the constitution.
   3. It proposed that there should be only two kinds of service, central services devoted to union administration and state service looking after state Administration.
   4. It proposed expanding the Financial capacity of the state with regard to corporation tax, customs and export tax.

   a. 1, 2 and 3 b. 2, 3 and 4 c. 1, 3 and 4
   d. All of the above e. Answer not known

   ராஜமன்னார் குழு அறிக்கை பற்றிய சரியான கூற்றுகளை கண்டறிக

   1. சட்டக்கூறு 263இன் படி பிரதமரை தலைவராகவும் மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாநிலங்களுக்கிடையேயான குழுவினை உருவாக்க பரிந்துரைத்தது
   2. இந்திய அரசமைப்பில் இருந்து சட்டக்கூறு 256, 257 மற்றும் 339(2) வினை நீக்க வேண்டும் என பரிந்துரைத்தது
   3. இக்குழு மத்திய அரசு நிர்வாகத்திற்கு மத்திய பணிகளும் மற்றும் மாநில அரசு நிர்வாகத்திற்கு மாநில பணிகளும் மட்டுமே பரிந்துரைத்தது
   4. மாநிலங்களின் நிதி சக்தியை அதிகரிப்பதற்கு தொழில்நிறுவனங்கள் வரி, சுங்க வரி மற்றும் ஏற்றுமதி வரியை மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு மாற்ற வேண்டும் என பரிந்துரைத்தது

a. 1, 2 மற்றும் 3　　b. 2, 3 மற்றும் 4　　c. 1, 3 மற்றும் 4
d. இவை அனைத்தும்　　e. விடை தெரியவில்லை

8. With regard to the Cabinet – Secretariat which among the following statement is/are incorrect?
   1. The office of the cabinet secretary was created in 1950. The first cabinet secretary was N.R. Pillai.
   2. The Prime Minister secretariat was renamed as Prime Minister Office (PMO) by Moraji Desai in 1977.
   3. The office of the principal Scientific adviser to the government of India (of PSA) was set up in November, 1999

   a. 1 only　　b. 2 only　　c. 3 only
   d. None of the above　　e. Answer not known

   அமைச்சரவை செயலாளர் அலுவலகம் பற்றி எது / எவை தவறான கூற்று?
   1. அமைச்சரவை செயலாளர் அலுவலகம் பதவியானது 1950 ஆண்டு உருவாக்கப்பட்டது. முதல் அமைச்சரவைச் செயலாளர் N.R. பிள்ளை ஆவார்
   2. பிரதமர் செயலகம் பிரதமர் அலுவலகம் என 1977ஆம் ஆண்டு மொரார்ஜி தேசாய் மாற்றினார்
   3. நவம்பர், 1999 ஆம் ஆண்டு இந்தியாவின் தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் உருவாக்கப்பட்டது

   a. 1 மட்டும்　　b. 2 மட்டும்　　c. 3 மட்டும்
   d. இவை ஏதுமில்லை　　e. விடை தெரியவில்லை

9. With reference to the making of Indian Constitution, consider the following statements.
   1. The members of the provincial legislative assembly indirectly elected the members of the constituent assembly.
   2. JP Kripalani requesting Sachchidananda Sinha to take the chair as temporary chairman.
   3. The provinces were to elect 292 members and 93 seats were reserved for the princely states.
   4. Two Hundred and Eighty – Four Members were present on 26th November 1949 and appended their signature to the constitution as finally passed.

   Which of the statement given above is/are correct?

   a. 1, 3 and 4　　b. 3 and 4　　c. 1 and 4
   d. 1, 2, 3 and 4　　e. Answer not known

   அரசியலமைப்பின் உருவாக்கம் தொடர்பான கூற்றுகளை ஆராய்க.
   1. மாகாணச் சட்டமன்றங்களின் உறுப்பினர்களே அரசமைப்பு நிர்ணய சபை உறுப்பினர்களை மறைமுக வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
   2. J.B. கிருபளானி அவர்கள் சச்சிதானந்த சின்ஹாவை தற்காலிகத் தலைவராக தலைமையேற்கும்படி கேட்டுக்கொண்டார்.
   3. மாகாணங்களில் இருந்து 292 உறுப்பினர்களும் சுதேச அரசுகளிடம் இருந்து 93 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
   4. 284 உறுப்பினர்கள் 26 நவம்பர் 1949 அன்று அரசமைப்பினை ஏற்று கையொப்பமிட்டு அரசமைப்பை நிறைவேற்றினர்.

   மேற்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?

   a. 1, 3 மற்றும் 4　　b. 3 மற்றும் 4　　c. 1 மற்றும் 4
   d. 1, 2, 3 மற்றும் 4　　e. விடை தெரியவில்லை

10. India was described as Land of 'unity and diversity' by whom and where
a. Rabindranath Tagore in Gitanjali
b. Mahatma Gandhi in 'My Experiments with Truth'
c. Jawaharlal Nehru in 'Discovery of India'
d. Subash Chandra Bose in 'An Indian Pilgrim'
e. Answer not known
இந்தியா ”வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு” என எங்கு யாரால் வருணிக்கப்பட்டது?
a. ரவீந்திரநாத தாகூர் தமது கீதாஞ்சலியில்
b. மகாத்மா காந்தி தமது ”சத்திய சோதனையில்
c. ஜவகர்லால் நேரு தமது ”டிஸ்கவர் ஆப் இண்டியா எனும் நூலில்
d. சுபாஷ் சந்திரபோஸ் தமது ”ஒரு இந்தியப் புனிதப் பயணம்”
e. விடை தெரியவில்லை

11. Match the following with correct opions
A. Bharat Ratna to Dr. Abdul kalam — 1. 2007
B. Rajiv Gandhi Khel Ratna to Mr. Vishwanath Anand — 2. 1997
C. India's first Grandmaster Vishwanath Anand — 3. 1988
D. Padma Vibushan to Vishwanath Anand — 4. 1991

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 4 | 2 | 1 | 3 |
| d. | 1 | 3 | 2 | 4 |

e. Answer not known
பொருத்துக:
A. அப்துல் கலாமுக்கு பாரதரத்னா கொடுக்கப்பட்ட ஆண்டு — 1. 2007
B. விஸ்வநாதன் ஆனந்துக்கு “ராஜீவ்காந்தி கேல் ரத்னா” விருது கொடுக்கப்பட்ட ஆண்டு — 2. 1997
C. இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டராக விஸ்வநாதன் ஆனந்த வெற்றிவாகை சூடிய ஆண்டு — 3. 1988
D. விஸ்வநாதன் ஆனந்துக்கு பத்மபூஷன் விருது வழங்கிய ஆண்டு — 4. 1991

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 4 | 2 | 1 | 3 |
| d. | 1 | 3 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

12. Identify correctly matched pair
1. Heritage animal - elephant
2. aquatic animal - Gharial
3. Reptile - Cobra
4. Bacteria - Lactobacillus
5. River - Indus
a. 1, 2, 3 and 4 only  b. 1, 2, 3 and 5 only  c. 1, 3 and 4 only
d. 1, 3, 4 and 5 only  e. Answer not known

சரியான இணைகளை கண்டறிந்து குறிப்பிடவும்
1. பாரம்பரியமான விலங்கு - யானை
2. நீர்வாழ்விலங்கு - கரியால்
3. ஊர்வன - ராஜநாகம்
4. பாக்டீரியா (நுண்உயிரி) - லாக்டோபேசில்லஸ்
5. நதி - சிந்து

a. 1, 2, 3 மற்றும் 4 b. 1, 2, 3 மற்றும் 5 c. 1, 3, மற்றும் 5
d. 1, 3, 4 மற்றும் 5 e. விடை தெரியவில்லை

13. Which of animal is not represented in national embelem

a. Horse b. Bull c. Elephant
d. Tiger e. Answer not known

தேசிய சின்னத்தில் இடம்பெறாத விலங்கு எது?

a. குதிரை b. காளை c. யானை
d. புலி e. விடை தெரியவில்லை

14. Consider following statements regarding National Anthem

I. Was written by Rabindranath Tagore in Bengali
II. Anthem is sung at duration of 52 seconds.

a. I is true b. II alone is true c. Both I and II are true
d. None of the above e. Answer not known

கீழ்க்காணும் செய்திகளில் தேசிய கீதத்துக்குத் தொடர்புடைய கருத்துக்களை தேர்வு செய்து குறிப்பிடவும்

I. வங்கமொழியில் ரவீந்திரநாத் தாகூரால் எழுதப்பட்டது
II. பாடப்படும் நேரம் 52 வினாடிகள்

a. I சரி b. II மட்டும் சரியானது c. இரண்டுமே சரியானவை
d. ஏதுவுமில்லை e. விடை தெரியவில்லை

15. Peacock sanctuary in TamilNadu is located in

a. Srivalliputhur Sanctuary b. Kalakkad Mundanthurai
c. Viralimalai d. Mudumalai
e. Answer not known

தமிழகத்தில் மயில் காப்பகம் எங்குள்ளது?

a. ஸ்ரீவில்லிபுத்தூர் b. களக்காடு முண்டந்துரை c. விராலி மலை
d. முதுமலை e. விடை தெரியவில்லை

16. National pledge was written by and in what language

a. Pingali Venkayya, Andhrapradesh - Telugu
b. Sarojini Naidu - Hindi
c. Pydimarri Venkata Subbarao - Telugu
d. Potti Sriramulu - Telugu
e. Answer not known

தேசிய உறுதிமொழி யாரால், எந்த மொழியில் எழுதப்பட்டது

a. பிங்காலி வெங்கையா, ஆந்திரபிரதேசம் - தெலுங்கு
b. சரோஜினி நாயுடு - ஹிந்தி
c. பிதிமாரி வெங்கட சுப்பாராவ் - தெலுங்கு
d. பொட்டி ஸ்ரீராமுலு - தெலுங்கு
e. விடை தெரியவில்லை

17. Consider the following statements regarding National Holidays.

I. President hoists National Flag on all important National Occasions like Republic day and Independence day at New Delhi.

II. On January 29, Republic day celebrations is brought to an end with Beating Retreat ceremony performed by Indian Army, Navy and Air Force. And President of India being Chief Guest

Correct statements are

a. I only b. II only c. Both I and II

d. None of the above e. Answer not known

தேசிய விடுமுறை பற்றிய தகவல்கள்

I. புதுதில்லியில் குடியரசுத் தலைவர் சுதந்திர தினம் குடியரசு தினம் போன்ற அனைத்து முக்கிய தேசிய நிகழ்வுகளின் போது தேசியக் கொடி ஏற்றுவார்.

II. ஜனவரி 29 அன்று குடியரதின விழா நிகழ்வுகள் பேரிகை முழக்கத்தோடு (முப்படை வீரர்களால்) முடிவுறும். குடியரசத்தலைவர் முக்கிய விருந்தினராக இருப்பார்

a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II

d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

18. On 15 August 1947, Mahakavi Bharatiyar's Poem "Aaduvome pallu paduvome" was sung in All India Radio by

a. M.S. Subbulakshmi b. D.K. Pattammal c. Lata Mangeshkar

d. L.R. Eeshwari e. Answer not known

ஆகஸ்டு 15, 1947 அன்று அகில இந்திய வானொலியில் மகாகவி பாரதியின் "ஆடுவோமே பள்ளு பாடுவோமே" பாடல் யாரால் பாடப்பட்டது?

a. M.S. சுப்பு லட்சுமி b. D.K. பட்டம்மாள் c. லதா மங்கேஷ்கர்

d. L.R.T. ஈஸ்வரி e. விடை தெரியவில்லை

19. Unites Nations declared October 2nd as

a. International day of peace b. International civil Rights day

c. Internal Civil disobedience day d. International day of Nonviolence

e. Answer not known

ஐக்கிய நாடுகள் சபை அக்டோபர் 2ம் நாளை எந்த தினமாக அறிவித்துள்ளது?

a. உலக அமைதி தினம் b. உலக குடியுரிமை தினம்

c. உள்நாட்டு சட்டமறுப்பு இயக்கம் d. சர்வதேச அகிம்சை தினம்

e. விடை தெரியவில்லை

20. First every flag flown after independence is stored in

a. Chennai fort museum b. Delhi museum

c. Sarnath museum d. Kolkata museum

e. Answer not known

சுதந்திரம் பெற்றபின் ஏற்றப்பட்ட முதல் கொடி எங்கு போற்றிப் பாதுகாக்கப்படுகின்றது?

a. சென்னை கோட்டை அருங்காட்சியகம் b. டில்லி அருங்காட்சியகம்

c. சாரநாத் அருங்காட்சியகம் d. கல்கத்தா அருங்காட்சியகம்

e. விடை தெரியவில்லை

21. Match the following with correct options

A. Independence day 1. November 26

B. Republic day 2. April 1

C. Constitution day of India 3. August 15

D. Right to free education enacted 4. January 26

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 2 | 3 | 4 | 1 |

e. Answer not known

பொருத்துக:

| | |
|---|---|
| A. சுதந்திர தினம் | 1. நவம்பர் 26 |
| B. குடியரசு தினம் | 2. ஏப்ரல் 1 |
| C. சம்விதான் திவாஸ் | 3. ஆகஸ்டு 15 |
| D. இலவச கல்வி பெறும் உரிமை நடைமுறைக்கு வந்தது | 4. ஜனவரி 26 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 2 | 3 | 4 | 1 |

e. விடை தெரியவில்லை

22. Assertion (A) : India does not follow representative democracy.
Reason (R) : In direct democracy, citizens can directly make laws.
a. Both A and R are correct and R explains A.
b. Both A and R are true and R does not explain A.
c. A is true R is false
d. A is false R is true
e. Answer not known

கூற்று (A) : இந்தியா பிரதிநிதித்துவ மக்களாட்சியைப் பின்பற்றவில்லை.
காரணம் (R): நேரடி மக்களாட்சியில் குடிமக்கள் நேரடியாக சட்டம் இயற்றலாம்.
a. (A) மற்றும் (R) சரி மேலும் (R), (A)-க்கு சரியான விளக்கம்
b. (A) மற்றும் (R) சரி ஆனால் (R), (A)-க்கு சரியான விளக்கம் அல்ல
c. (A) சரி ஆனால் (R) தவறு
d. (A) தவறு ஆனால் (R) சரி
e. விடை தெரியவில்லை

23. Consider following statements and choose correct one.
I. In 2007, UN General Assembly resolved to observe 15 September as International day of democracy.
II. Jawaharlal Nehru being our first Prime Minister is described as Chief architect of constitution

a. I only b. II only c. Both I and II
d. None of above e. Answer not known

சரியான கூற்றுகளை கண்டறிக
I. 2007ல் ஐக்கியநாடுகள் சபை செப்டம்பர் 15ம் நாளை சர்வதேச மக்களாட்சி நாளாக அனுசரிக்க முடிவு செய்தது
II. முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு, இந்திய அரசியலமைப்பின் சிற்பி என வருணிக்கப்படுகிறார்.

a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

24. Rule of Law was advocated by

a. Montesquieu b. A.V. Dicey c. John Locke
d. Aristotle e. Answer not known

சட்டத்தின் ஆட்சி முறை யாரால் கொண்டுவரப்பட்டது?

a. மான்டேகு b. A.V. டைசி c. ஜான் லாக்
d. அரிஸ்டாடில் e. விடை தெரியவில்லை

25. What is party manifesto?

a. Highlights guiding principles of political party
b. Programmes and policies that candidates announce before elections that party will under take if voted to power
c. Analysis of Political Parties on functioning of party in power.
d. Solution to grievance put forward by party members.
e. Answer not known

கட்சிகளின் வாக்குறுதி என்றால் என்ன?

a. அரசியல் கட்சியின் கொள்கை விளக்கம்
b. தேர்தலில் வெற்றிபெற்றபின் மேற்கொள்ளப் போவதாகக் கூறும் செயல்பாடுகள்
c. ஆட்சியில் உள்ள கட்சியின் செயல்பாடுகள் பற்றிய கருத்து விளக்கப் பேச்சு
d. குறைகள் / புகார்களுக்கு அளிக்க இருக்கும் தீர்வுகள்
e. விடை தெரியவில்லை

26. What are advantages of a party being recognised?

a. electoral symbols are reserved for political party.
b. provision of time for political broadcast on state owned television and radio stations.
c. freedom from model code of conduct rules.
d. Both a and b are true.
e. Answer not known

அங்கீகாரம் பெறுவதனால் ஒரு கட்சி பெறும் பலன்கள் யாவை?

a. அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் சின்னங்கள் பதிவு உரிமை அளிக்கப்படுகிறது.
b. அரசு தொலைக்காட்சி மற்றும் அரசு வானொலி மூலம் பிரசாரம் செய்ய கால அவகாசம் அளித்தல்
c. மாதிரி நடவடிக்கை விதிகளை கடைபிடிப்பதிலிருந்து விலக்கு
d. a மற்றும் b
e. விடை தெரியவில்லை

27. Consider the following statements and choose correct answer.

Assertion (A) : Election Commission has stopped allotting animals as electoral symbols

Reason (R) : To prevent use of animals in demonstration by political parties.

a. Both (A) and (R) are correct and (R) is the correct explanation to (A).
b. Both (A) and (R) are correct but (R) is not the correct explanation to (A)
c. (A) is True, (R) is false
d. (A) is false, (R) is true.
e. Answer not known

கீழ்க்கொடுக்கப்பட்டவற்றுள் சரியான கருத்தை தேர்வுசெய்யவும்
கூற்று (A) : தேர்தல் ஆணையம், விலங்குகளை, தேர்தல் சின்னமாக அளிப்பதை நிறுத்தியுள்ளது.
காரணம் (R): அரசியல் கட்சிகள் பிரச்சாரத்தின் போது விலங்குகளை உபயோகிப்பதை தவீர்ப்பதற்காக
a. (A) மற்றும் (R) சரி மேலும் (R), (A) க்கு சரியான விளக்கம்
b. (A) மற்றும் (R) சரி ஆனால் (R), (A)க்கு சரியான விளக்கம் அல்ல
c. (A) சரி ஆனால் (R) தவறு
d. (A) தவறு ஆனால் (R) சரி
e. விடை தெரியவில்லை

28. Consider following statements
Assertion (A) : Though position of Governor is similar to President he has greater powers compared to president.
Reason (R) : Governor can act in his discretion on recommending imposition of emergency, seeking information from council of ministers.
a. Both A and R are correct and R is correct explanation for A
b. Both A and R are correct but R does not explain A
c. A is true, R is false
d. A is false, R is true
e. Answer not known
கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள செய்திகளுள் சரியானவற்றை குறிப்பிடுக.
கூற்று (A) : ஆளுநரும், குடியரசுத்தலைவரும் ஒரே மாதிரியான பதவிகளை வகித்தாலும், ஆளுநருக்கு அதிக அதிகாரங்கள் உண்டு.
காரணம் (R): ஆளுநர், தமது அதிகார வரம்புக்குள், அவசர நிலையை பரிந்துரைக்கலாம், அமைச்சரவையிடமிருந்து தகவல்களைக் கோரி பெறலாம்.
a. (A) மற்றும் (R) சரி மேலும் (R), (A) க்கு சரியான விளக்கம்
b. (A) மற்றும் (R) சரி ஆனால் (R), (A)க்கு சரியான விளக்கம் அல்ல
c. (A) சரி ஆனால் (R) தவறு
d. (A) தவறு ஆனால் (R) சரி
e. விடை தெரியவில்லை

29. Assertion (A) : India has Parliamentary form of democracy.
Reason (R) : Indian Parliament comprise two houses.
a. Both (A) and (R) are true and (R) explains (A)
b. Both (A) and (R) are true and (R) does not explain (A)
c. (A) is true (R) is false
d. (A) is false and (R) is true
e. Answer not known
கூற்று (A) : இந்தியாவில் பாராளுமன்ற மக்களாட்சி முறையானது நிலவுகிறது.
காரணம் (R): இந்திய பாராளுமன்றமானது இரு அவைகளைக் கொண்டுள்ளது.
a. (A) மற்றும் (R) சரி மேலும் (R) என்பது (A) –ன் விளக்கமாகும்
b. (A) மற்றும் (R) சரியானவை மேலும் (R) என்பது (A)ன் விளக்கமல்ல
c. (A) சரி (R) தவறு
d. (A) தவறு மற்றும் (R) சரியானது
e. விடை தெரியவில்லை

30. Consider the following statements.
1. Meaning of Franchise denotes right to elect.
2. Universal adult franchise creates legal equality.
Choose wrong statements.
a. One only b. Two only c. Both One and Two
d. None of the above e. Answer not known
பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
1. வாக்குரிமை என்பது தேர்வு செய்யப்படும் உரிமையைக் குறிக்கிறது.
2. வயது வந்தோர் வாக்குரிமை சட்ட சமத்துவத்தை உருவாக்குகிறது
தவறான கூற்றுகளைத் தேர்க.
a. 1 மட்டும் b. 2 மட்டும் c. 1 மற்றும் 2 இரண்டு
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

31. Provisions regarding electoral system is mentioned under Article 324 to 329 in
a. Part XV b. Part XX c. Part XVIII
d. Part XXII e. Answer not known
சட்டக்கூறு 324 - 329 ன் கீழ் குறிப்பிடப்படும் தேர்தல் முறையின் அம்சங்கள் அடங்குவது ________.
a. பகுதி XV b. பகுதி XX c. பகுதி XVIII
d. பகுதி XXII e. விடை தெரியவில்லை

32. Consider the following statements and choose correct explanation
Assertion (A) : Pressure groups originated in USA and are different from Political Parties.
Reasoning (R) : They do not try to capture political power or contest election.
a. Both (A) and (R) are true and R is correct explanation
b. Both (A) and (R) are true and R is not correct explanation
c. A is true, R is false.
d. A is false, R is true.
e. Answer not known
பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
கூற்று (A): அரசியல் கட்சிகளிலிருந்து அழுத்தக் குழுக்கள் (அமெரிக்காவில் தோன்றியவை) வேறுபடுகின்றன.
காரணம் (R): அவைகள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவோ (அ) தேர்தலில் போட்டியிடவோ முனைவதில்லை.
a. (A) மற்றும் (R) சரி மேலும் (R) என்பது சரியான விளக்கமாகும்
b. (A) மற்றும் (R) சரி மேலும் (R) என்பது சரியான விளக்கமல்ல
c. (A) சரி (R) தவறானது
d. (A) தவறு, (R) சரியானது
e. விடை தெரியவில்லை

33. Leader of opposition enjoys rank of
a. Governor b. Member of Parliament c. Cabinet Minister
d. Speaker e. Answer not known
எதிர்க்கட்சித் தலைவரானவர் __________ அந்தஸ்தினை உடையவர்
a. ஆளுநர் b. பாராளுமன்ற உறுப்பினர் c. கேபினெட் அமைச்சர்
d. சபாநாயகர் e. விடை தெரியவில்லை

34. Consider following statements
I. United Nation Organisation was established on 24 October 1945.
II. Universal Declaration of Human Rights contains 30 articles.
a. Statement II is correct b. Statement I is correct
c. Both are correct d. None of statement is correct
e. Answer not known
பின்வரும் கூற்றுகளை கருதுக.
I. அக்டோபர் 24, 1945-ல் ஐக்கிய நாடுகள் அமைப்பானது தோற்றுவிக்கப்பட்டது.
II. உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனமானது 30 சரத்துகளை உடையது.
a. கூற்று II சரி b. கூற்று I சரி c. இரண்டும் சரி
d. இரண்டும் சரியல்ல e. விடை தெரியவில்லை

35. Which of the following is not federal feature of Indian constitution?
a. Supremacy of Constitution b. Independent Judiciary
c. Written Constitution d. Integrated Judiciary
e. Answer not known
பின்வருவனவற்றுள் இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சியின் அம்சமல்லாதது எது?
a. அரசியலமைப்பின் உயரதிகாரம் b. சுதந்திரமான நீதித்துறை
c. எழுதப்பட்ட அரசியலமைப்பு d. ஒருங்கிணைந்த நீதித்துறை
e. விடை தெரியவில்லை

36. Which of following is not a characteristic feature of parliamentary form of government?
a. Harmony Between Legislature and Executive
b. Responsible Government
c. Stable Government
d. Majority Party Rule
e. Answer not known
பின்வருவன்வற்றுள் பாராளுமன்ற முறை அரசாங்கத்தின் அம்சமல்லாதது எது?
a. சட்டம் இயற்றுதல் மற்றும் நிர்வாகம் இடையேயான இணக்கநிலை
b. பொறுப்பான அரசாங்கம்
c. நிலையான அரசாங்கம்
d. பெரும்பான்மை கட்சியின் ஆட்சி
e. விடை தெரியவில்லை

37. Who told that 'Man by nature is a political animal?
a. Plato b. Jean Bodin c. Aristotle
d. Socrates e. Answer not known
மனிதன் இயற்கையில் ஒரு அரசியல் விலங்கு என்று கூறியவர் யார்?
a. பிளாட்டோ b. ஜீன் போடின் c. அரிஸ்டாட்டில்
d. சாக்ரடீஸ் e. விடை தெரியவில்லை

38. Which convention mentions about Rights and duties of state, 1933?
a. Montreal Convention b. Vienna convention
c. Montevideo convention d. Stockholm convention
e. Answer not known

1933 இல் அரசுகளின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி குறிப்பிட்ட மாநாடு எது?
a. மாண்ட்ரியல் மாநாடு b. வியன்னா மாநாடு
c. மான்டிவீடியோ மாநாடு d. ஸ்டாக்ஹோம் மாநாடு
e. விடை தெரியவில்லை

39. Term Sovereignty derive derived from Latin word _______ meaning supreme
a. Soverain b. Superanus c. Superior
d. Soberano e. Answer not known
இறையாண்மை எனும் சொல் இலத்தீன் மொழிச் சொல்லான ________ என்பதிலிருந்து பெறப்பட்டது. அதற்கு உயர்ந்த அதிகாரம் என்று பொருளாகும்.
a. சாவரின் b. சூப்பரானஸ் c. சூப்பீரியர்
d. சூப்பரானோ e. விடை தெரியவில்லை

40. Which is main component of state that determine citizenship status.
a. Territory b. Government c. Sovereignty
d. Population e. Answer not known
கீழ்வருபவைகளில் எது அரசிலுள்ள குடிமக்களின் தகுதியை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக கருதுப்படுகிறது?
a. நிலப்பரப்பு b. அரசாங்கம் c. இறையாண்மை
d. மக்கள்தொகை e. விடை தெரியவில்லை

41. The slogan 'Men are born and always continue free and equal in their rights' is in.
a. American declaration b. Charter of league nations
c. charter of UNO d. Slogan of French Revolution
e. Answer not known
மனிதர்கள் சுதந்திரமாக பிறந்த உடன் எப்பொழுதும் சுதந்திரமான மற்றும் சமமான உரிமைகளை பெற்றிருக்கிறார்கள்.
a. அமெரிக்க பிரகடனம் b. லீக் நாடுகளின் சாசனம்
c. UNO-வின் சாசனம் d. பிரஞ்சு புரட்சியின் முழக்கம்
e. விடை தெரியவில்லை

42. Which of following document says all men are created equal?
a. Constitution of people Republic of china b. French constitution
c. US constitution d. Swiss constitution
e. Answer not known
அனைத்து மக்களும் சமமாக படைக்கப்பட்டிருக்கிறார்கள்
a. சீன மக்கள் குடியரசு அரசியலமைப்பு b. பிரஞ்சு அரசியலமைப்பு
c. அமெரிக்க அரசியலமைப்பு d. சுவிஸ் நாட்டின் அரசியலமைப்பு
e. விடை தெரியவில்லை

43. Who said "Man was born free but everywhere he is in chains.
a. John Locken b. Jean Jacques Rousseau c. Montesquieu
d. Voltaire e. Answer not known
“மனிதன் சுதந்திரமாக பிறக்கிறான், ஆனால் எங்கெங்கு கானினும் அவன் விலங்கிடப்பட்டிருக்கிறான்”
a. ஜான் லாக்கன் b. ஜீன் ஜேக்கஸ் ரூசோ c. மான்டெஸ்க்யூ
d. வால்டேயர் e. விடை தெரியவில்லை

44. "Religion is opium of people' is said by
a. Marx b. Galileo c. Russel
d. Bhagat singh e. Answer not known
மதம் என்பது மக்களின் போதை பொருள்
a. மார்க்ஸ் b. கலிலியோ c. ரஸ்ஸல்
d. பகத்சிங் e. விடை தெரியவில்லை

45. "Jallikattu' is supported based on _______ in Indian constitution.
a. Article 21 b. Article 19 (1) (e) c. Article 25
d. Article 29(1) e. Answer not known
இந்திய அரசியலமைப்பில் "ஜல்லிக்கட்டு" எந்த அரசியலமைப்பு சரத்து அடிப்படையில் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது?
a. சரத்து 21 b. சரத்து 19(1) (e) c. சரத்து 25
d. சரத்து 29(1) e. விடை தெரியவில்லை

46. Indian political thinker who proposed radical democracy was.
a. M.N. Roy b. J. Nehru c. Gandhi
d. Ambedkar e. Answer not known
தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி முறையை சிறந்த மக்களாட்சி முறை என்று பரிந்துரைத்த இந்திய அரசியல் சிந்தனையாளர் யார்?
a. M.N. ராய் b. ஜவஹர்லால் நேரு c. காந்தி
d. அம்பேத்கர் e. விடை தெரியவில்லை

47. Which Indian political thinker said that under democracy, weakest should have same opportunity as the strongest
a. Nehru b. M.N. Roy c. Gandhi
d. Periyar e. Answer not known
"எளியோருக்கும் வலியோருக்கும் சம வாய்ப்பு வழங்குதல் மக்களாட்சியில் மட்டுமே நடைபெறும்" என்ற மக்களாட்சி பற்றிய கூற்றை எந்த இந்திய அரசியல் சிந்தனையாளர் கூறினார்?
a. நேரு b. M.N. ராய் c. காந்தி
d. பெரியார் e. விடை தெரியவில்லை

48. Due to following reasons, founding fathers preferred British parliamentary system.
1. Familiarity with system 2. More responsibility
3. Seperation of power 4. Heterogenous Indian society
a. Only 1,2, 4 b. only 1, 2, 3 c. only 2, 3, 4
d. All the above e. Answer not known
நமது அரசமைப்பினை தோற்றுவிக்க கீழ்க்கண்ட எக்காரணங்களுக்காக இங்கிலாந்து நாடாளுமன்ற முறையினை தேர்ந்தெடுத்தனர்?
1. அம்முறைமையுடனான பரிச்சயம் 2. அதிக பொறுப்புணர்வு
3. அதிகாரப் பிரிவினை 4. பன்முகத்தன்மையுள்ள இந்திய சமுதாயம்
a. 1, 2, 4 மட்டும் b. 1, 2, 3 மட்டும் c. 2, 3, 4 மட்டும்
d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

49. The term government is derived from old French word _______.
a. Governor b. Gubernare c. Guranment
d. Gubarment e. Answer not known

அரசாங்கம் எனும் சொல்லானது பழைய பிரெஞ்சு வார்த்தையான ________ என்பதிலிருந்து பெறப்பட்டதாகும்.
a. ஆளுநர் (Governor) b. குபர்நேர் (Gubernare)
c. குரன்மெண்ட் (Guranment) d. குபர்மெண்ட் (Gubarment)
e. விடை தெரியவில்லை

50. Which are features of parliamentary form of government.
I. Nominal and Real Executive II. Leadership of Prime minister
III. Majority party rule IV. Double membership
a. I and III only b. All the above c. I, II and III only
d. None of the above e. Answer not known
பாராளுமன்ற முறை அரசாங்கத்தின் அம்சங்கள் எவை?
I. பெயரளவு மற்றும் உண்மையான செயலாட்சி
II. பிரதம மந்திரியின் தலைமை
III. பெரும்பான்மை பெற்ற அரசியல் கட்சியின் ஆட்சி
IV. இரட்டை உறுப்பினராதல்
a. I மற்றும் III மட்டும் b. மேற்கண்ட அனைத்தும் c. I, II மற்றும் III மட்டும்
d. இவை எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

51. Who described parliamentary form of government as dictatorship of cabinet?
a. Harold J. Laski b. Ramsay Muir c. Ivor Jennings
d. Munio e. Answer not known
பாராளுமன்ற முறை அரசாங்கத்தை அமைச்சர் குழுவின் சர்வாதிகாரம் என குற்றம் சாட்டியவர் யார்?
a. ஹெரால்ட் J. லாஸ்கி b. ராம்சே மூர் c. ஐவர் ஜென்னிங்ஸ்
d. முனியோ e. விடை தெரியவில்லை

52. Consider the following statements regarding powers of America president under presidential system of government and identify correct statements
I. president is not responsible to lower house of parliament or congress.
II. President appoints departmental secretaries. who are responsible only to him and can be removed by him at any time.
a. I only b. II only c. Both I and II
d. None of the above e. Answer not known
அமெரிக்க குடியரசு தலைவர் முறை அரசாங்கத்தில், குடியரசு தலைவரின் அதிகாரம் தொடர்பான பின்வரும் கூற்றுகளை கருத்தில் கொண்டு, சரியான கூற்றை கண்டறிக.
I. குடியரசுதலைவர் பாராளுமன்ற கீழவை அல்லது காங்கிரஸிற்கு பொறுப்பானவர் அல்ல
II. குடியரசுத் தலைவர் துறைவாரியான செயலர்களை நியமனம் செய்வர். மேலும், அவர் நியமனம் செய்யப்பட்ட செயலர்களுக்கு மட்டுமே பொறுப்பானவர் ஆவர் மற்றும் எந்நேரத்திலும் அச்செயலர்களை பதவிநீக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளார்.
a. I மட்டும் b. II மட்டும் c. I மற்றும் II இரண்டும்
d. இவை எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

53. Which of following are central tenants of gross National Happiness?
I. Sustainable and equitable socio economic development
II. Environment conservation
III. Preservation of culture
IV. Good governance
V. Percapita income
VI. Purchasing power parity
a. I, II and III only b. All the above c. I, II, III and IV only
d. None of above e. Answer not known
கீழ்க்கண்டவற்றில் ஒட்டுமொத்த தேசிய மகிழ்ச்சியின் மையச் சால்புகள் எவை?
I. நிலையான மற்றும் சமநீதிப்பங்கிலான சமூக, பொருளாதார வளர்ச்சி
II. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
III. பண்பாட்டினை வளர்த்தல்
IV. நல் ஆளுகை
V. தலா வருமானம்
VI. வாங்கும் திறன் சமநிலை
a. I, II மற்றும் III மட்டும் b. மேற்கண்ட அனைத்தும்
c. I, II, III மற்றும் IV மட்டும் d. எதுவுமில்லை

54. In a unitary form of government, local government derives power from.
a. Constitution b. Head of state c. Prime minister
d. Legislative enactments e. Answer not known
ஒற்றையாட்சி முறை அரசாங்கத்தில், உள்ளூர் அரசாங்கத்தின் அதிகாரம் எதிலிருந்து பெறப்படுகிறது?
a. அரசியலமைப்பு b. அரசின் தலைமை c. பிரதமர்
d. சட்டமன்ற நடைமுறைகள் e. விடை தெரியவில்லை

55. Which form of government is suitable for countries which are multiethnicity. Multicultural and multilingual
a. Parliamentary form b. unitary form c. Federal form
d. Presidential form e. Answer not known
பலவகையான நெறிமுறைகள், பண்பாடுகள் மற்றும் மொழிகளைக் கொண்ட நாடுகளுக்கு பொருத்தமான அரசாங்க முறை எது?
a. பாராளுமன்ற முறை b. ஒற்றையாட்சி முறை c. கூட்டாட்சி முறை
d. குடியரசு தலைவர் முறை e. விடை தெரியவில்லை

56. Which form of power sharing is most commonly found in federal form of government?
a. Vertical division of power
b. Sharing of power among political parties
c. Division of power among various communities
d. Horizontal division of power
e. Answer not known
கூட்டாட்சி முறையிலான அரசாங்கத்தில் பொதுவாக கண்டறியப்படக்கூடிய அதிகார பகிர்வு முறை எது?
a. செங்குத்து அதிகார பகிர்வு
b. அரசியல் கட்சிகளிடையேயான அதிகாரப்பகிர்வு
c. பல்வேறு வகுப்பினர்களிடையேயான அதிகாரப் பகிர்வு
d. கிடைமட்ட அதிகாரப் பகிர்வு
e. விடை தெரியவில்லை

57. Which are basic objectives of federal system
a. To safeguard and promote unity of country
b. To accommodate regional diversity
c. To share powers among different communities
d. both A and B are correct
e. Answer not known
கூட்டாட்சி முறையின் அடிப்படை நோக்கம் என்ன?
a. நாட்டின் ஒற்றுமையை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்
b. பிராந்திய பன்முகத்தன்மைக்கு இடமளித்தல்
c. வெவ்வேறு வகுப்பினரிடையே அதிகாரப் பகிர்வு
d. a மற்றும் b இரண்டும் சரி
e. விடை தெரியவில்லை

58. Government are classified as parliamentary and presidential on basis of
a. Relations between politicians and civil servants
b. written and unwritten constitution
c. Rigid and flexible constitutions
d. Relations between legislature and executive
e. Answer not known
எதன் அடிப்படையில் அரசாங்கமானது, பாராளுமன்ற முறை மற்றும் குடியரசுத்தலைவர் முறை என வகைப்படுத்தப்படுகின்றன?
a. அரசியல்வாதிகள் மற்றும் குடிமைப்பணியாளர்கள் இடையேயான உறவுகள்
b. எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத அரசியலமைப்பு
c. நெகிழா மற்றும் நெகிழும் அரசியலமைப்பு
d. சட்டமன்றம் மற்றும் நிர்வாகத்திற்கு இடையிலான உறவுகள்
e. விடை தெரியவில்லை

59. Which body in Indian political system is an example of direct democracy?
a. zila parishad
b. Panchayat samiti
c. Legislative assembly
d. Gram sabha
e. Answer not known
கீழ்க்கண்டவற்றுள் இந்திய அரசியல் அமைப்பின் எந்த அமைப்பு நேரடி மக்களாட்சி முறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்?
a. ஜில்லா பரிஷத்
b. பஞ்சாயத்து சமிதி
c. சட்டமன்ற பேரவை
d. கிராம சபை
e. விடை தெரியவில்லை

60. Match the following:

| | |
|---|---|
| A. Chipko movement | 1. Uttarkhand |
| B. Appiko movement | 2. Karnataka |
| C. Bishnoi movement | 3. Rajasthan |
| D. Silent valley | 4. Kerala |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. Answer not known

பொருத்துக.

A. சிப்கோ இயக்கம் 1. உத்தரகாண்ட்

B. அப்பிக்கோ இயக்கம் 2. கர்நாடகா

C. பிஷ்னோய் இயக்கம் 3. ராஜஸ்தான்

D. அமைதிப் பள்ளத்தாக்கு இயக்கம் 4. கேரளா

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

61. Psephology deals with
a. Statistical analysis of election and polls
b. Opinion polls and exit polls
c. public opinion
d. All the above
e. Answer not known
செ.ஃபாலஜி (Psephology) எதைப் பற்றி கையாள்கிறது?
a. தேர்தல் மற்றும் தேர்தல் குறித்த புள்ளிவிவர பகுப்பாய்வு
b. கருத்து கணிப்புகள் (ம) தேர்தலுக்கு பிந்தைய வாக்கெடுப்புகள்
c. பொதுக் கருத்து
d. மேலே உள்ள அனைத்தும்
e. விடை தெரியவில்லை

62. Consider the following Statement.
Assertion (A): Political parties mobilize Public opinion.
Reason (R): Public opinion influence election results.
a. Both A and R are true and R is correct explanation
b. Both A and R are true and R is not correct explanation of A
c. A is true , R is false
d. A is false, but R is true
e. Answer not known
கூற்று(A): அரசியல் கட்சிகள் பொதுக்கருத்தினை ஒன்றிணைக்கின்றன.
காரணம் (R): பொதுக்கருத்து தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
a. கூற்று A காரணம் R இரண்டும் சரி (மற்றும்) R என்பது A-ன் சரியான விளக்கமாகும்.
b. கூற்று A காரணம் R இரண்டும் சரி மற்றும் R என்பது A –ன் சரியான விளக்கமல்ல.
c. கூற்று A சரி, ஆனால் காரணம் R தவறு.
d. கூற்று A தவறு, ஆனால் காரணம் R சரி.
e. விடை தெரியவில்லை

63. Match following with correct options

A. Shiromani Akali Dal 1. Telangana & Andhra Pradesh

B. Rashtriya Janata Dal 2. Maharashtra

C. Teluge Desam Party 3. Punjab

D. People democratic party 4. Jammu and Kashmir

E. Shiv sena 5. Bihar

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 | 5 |
| b. | 5 | 4 | 3 | 2 | 1 |
| c. | 3 | 5 | 1 | 4 | 2 |
| d. | 4 | 6 | 1 | 5 | 3 |

e. Answer not known

கீழ்க்கண்டவற்றை சரியான விடையுடன் பொருத்துக.

| | |
|---|---|
| A. சிரோன்மணி அகாலிதளம் | 1. தெலுங்கானா & ஆந்திரப் பிரதேசம் |
| B. ராஷ்ட்ரிய ஜனதா தளம் | 2. மகாராஷ்டிரா |
| C. தெலுங்கு தேசம் கட்சி | 3. பஞ்சாப் |
| D. ஜனநாயக மக்கள் கட்சி | 4. ஜம்மு (மற்றும்) காஷ்மீர் |
| E. சிவசேனா | 5. பீகார் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 | 5 |
| b. | 5 | 4 | 3 | 2 | 1 |
| c. | 3 | 5 | 1 | 4 | 2 |
| d. | 4 | 6 | 1 | 5 | 3 |

e. விடை தெரியவில்லை

64. Consider the following statements with respect to languages of India
    i. Indian constitution recognizes twenty-two languages as official languages
    ii. As per 2011 census, Hindi is spoken by more than 50% of population.

    Which of the above statement is/are correct?

    a. I only b. ii only c. Both I and ii
    d. Neither I not ii e. Answer not known

    இந்தியாவின் மொழிகள் பற்றிய பின்வரும் கூற்றுகளை ஆராயவும்.
    i. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 22 மொழிகளை அதிகாரப்பூர்வ மொழிகளாக அங்கீகரித்துள்ளது
    ii. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 50% க்கும் அதிகமான மக்களால் இந்தி பேசப்படுகிறது.

    a. i மட்டும் b. ii மட்டும் c. i,ii இரண்டும்
    d. I மற்றும் ii இரண்டுமில்லை e. விடை தெரியவில்லை

65. With reference to "Consumer Protection Act, 2019" consider the following statements
    1. It included for the first time "e-commerce transactions" for consumer protection
    2. No words given on unfair trade practices
    3. Central Consumer Protection Authority (CCPA) would be established

    a. 1 only b. 1 and 2 only c. 1 and 3 only
    d. 1,2 and 3 e. Answer not known

    நுகர்வோர் பாதுபாப்பு சட்டம் 2019 ஐப் பொறுத்து பின்வரும் கூற்றுகளை ஆராயவும்.
    1. இது முதல் முறையாக நுகர்வோர் பாதுகாப்பிற்காக "இ-காமர்ஸ் பரிவர்த்தனைகளை" உள்ளடக்கியது
    2. நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை
    3. இதன்படி மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் நிறுவப்படும்

    a. 1 மட்டும் b. 1 மற்றும் 2 மட்டும் c. 1,3 மட்டும்
    d. 1, 2, 3 e. விடை தெரியவில்லை

66. Match the following

| List I | List II |
|---|---|
| A. Essential Commodities Act | 1. 2009 |
| Bureau of Indian Standards Act | 2. 1955 |
| C. Legal Metrology Act | 3. 2019 |
| D. Consumer Protection Act | 4. 1986 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 3 | 1 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 4 | 2 | 1 | 3 |

e. Answer not known

பொருத்துக.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. அத்தியாவசிய பொருட்கள் சட்டம் | 1. 2009 |
| B. இந்திய தரநிலை பணியக சட்டம் | 2. 1955 |
| C. சட்ட அளவியல் சட்டம் | 3. 2019 |
| D. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் | 4. 1986 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 3 | 1 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 4 | 2 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

67. Consider the following statements regarding National consumer disputes redressal commission

1. National Consumer Dispute Redressal Commission (NCDRC) is a quasi-judicial commission
2. It can exercise Jurisdiction over > 2 crore according to 2021 rules value products
3. It is headed by retried High Court Judge

Which of the above statement is/are correct?

a. 1 only　　b. 1 and 2 only　　c. 1 and 3 only
d. 1, 2 and 3　　e. Answer not known

தேசிய நுகர்வோர் தகராறுகள் தீர்ப்பாணையம் பொறுத்து பின்வரும் கூற்றுகளைக் காண்க

1. தேசிய நுகர்வோர் தகராறுகள் தீர்ப்பானையம் ஒரு அரை நீதித்துறை அமைப்பாகும்
2. இது 2 கோடி ரூபாய் மதிப்பிற்கு மேல் உள்ள பொருட்களுக்கு இவ்வதிகார வரம்பை பயன்படுத்தலாம்
3. இது ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் உள்ளது

மேற்கண்ட கூற்றுகளில் சரியானவை எது?

a. 1 மட்டும்　　b. 1 மற்றும் 2 மட்டும்　　c. 1 மற்றும் 3 மட்டும்
d. 1,2,3　　e. விடை தெரியவில்லை

68. With reference to secularism, consider the following statements.

1. Secularism is the principle of separation of state and religion
2. George Jacob Holyoake coined the term secularism
3. India's original constitution included the term secularism in it

Which of the above statements is/are correct?

a. 1 and 2 only b. 2 and 3 only c. 1 and 3 only
d. 1, 2 and 3 e. Answer not known

மதச்சார்பின்மை பற்றிய பின்வரும் கூற்றுகளைக் காண்க
1. மதச்சார்பின்மை என்பது அரசையும் மதத்தையும் பிரிக்கும் கொள்கையாகும்
2. ஜார்ஜ் ஜேக்கப் ஹோல்யோக் மதச்சார்பின்மை என்ற சொல்லை உருவாக்கினார்
3. இந்தியாவின் மூல அரசியலமைப்பில் மதச்சார்பின்மை என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது
பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?

a. 1, 2 மட்டும் b. 2, 3 மட்டும் c. 1, 3 மட்டும்
d. 1, 2, 3 e. விடை தெரியவில்லை

69. With reference to Universal Declaration of Human Rights (UDHR), which of the following is/are correct?
1. UDHR was adopted by UNGA (UN General Assembly) in 1948
2. 10th November is observed as Human Rights Day
3. UDHR is also known as Magna Casta of Human rights
4. UDHR is the most translated document in the world

a. 1, 2 and 3 only b. 1 and 3 only c. 1, 3 and 4 only
d. 2, 3 and 4 only e. Answer not known

மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனத்ததை (UDHR) பற்றிய சரியான கூற்றுகளைக் காண்க
1. UDHR, 1948 ல் UNGA (ஐநா பொதுச்சபை) யால் ஏற்றுக்கொள்ளப்பட்டது
2. நவம்பர் 10 ஆம் தேதி மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது
3. UDHR மனித உரிமைகளின் மகாசாசனம் எனப்படுகிறது
4. UDHR என்பது உலகிலேயே அதிகம் மொழிபெயர்க்கப்பட்ட ஆவணமாகும்

a. 1, 2 மற்றும் 3 மட்டும் b. 1, 3 மட்டும் c. 1, 3, 4 மட்டும்
d. 2, 3, 4 மட்டும் e. விடை தெரியவில்லை

70. Which of the following is correctly matched
1. Dowry prohibition Act – 1961 2. Hindu Marriage Act - 1956
3. Hindu Succession Act – 1955 4. Eve-teasing Act - 1997

a. 1 and 2 only b. 3 only c. 1 and 4 only
d. 1 and 3 only e. Answer not known

பின்வருவனவற்றில் சரியாகப் பொருந்துவது எது?
1. வரதட்சனை தடுப்புச் சட்டம் - 1961
2. இந்து திருமண சட்டம் - 1956
3. இந்து வாரிசுரிமைச் சட்டம் - 1955
4. பெண்களை கேலிச்செய்தல் தடைச்சட்டம் - 1997

a. 1, 2 மட்டும் b. 3 மட்டும் c. 1, 4 மட்டும்
d. 1, 3 மட்டும் e. விடை தெரியவில்லை

71. With reference to Human Rights commission, consider the following statements
1. NHRC, a constitutional body established on 12th October, 1993
2. Tamil Nadu's SHRC was formed on 17th April, 1997
3. NHRC's members are appointed by the president

Which of the above statements is/are correct?

a. 1 and 2 only b. 2 and 3 only c. 1 and 3 only
d. 1, 2 and 3 e. Answer not known

மனித உரிமைகள் ஆணையம் பற்றிய கூற்றுகளை ஆய்க
1. NHRC (தேசிய மனித உரிமைகள் ஆணையம் 1993 ஆம் ஆண்டு அக்டோபர், 12ம் தேதி நிறுவப்பட்ட ஒரு அரசியலமைப்பு அமைப்பு
2. தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம் ஏப்ரல் 17, 1997-ல் உருவாக்கப்பட்டது
3. NHRC உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார்கள்
மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது?
a. 1 மற்றும் 2 மட்டும் b. 2, 3 மட்டும் c. 1, 3 மட்டும்
d. 1, 2, 3 மட்டும் e. விடை தெரியவில்லை

72. Consider the following statements:
1. Chief minister must be a member of state legislature assembly (or) council
2. If CM is not a member of state legislature, at the time of his appointment, he must be so within a period of twelve months.
3. CM has fixed term of office for 5 years.
Which of the statements given above is/ are correct?
a. 1 and 2 only b. 1, 2 and 3 only c. 1 only
d. 1 and 3 only e. Answer not known
பின்வரும் கூற்றுகளை ஆய்க.
1. முதலமைச்சர் மாநில சட்டமன்ற பேரவை அல்லது மேலவை உறுப்பினராக இருக்க வேண்டும்.
2. முதலமைச்சர் நியமனத்தின் போது சட்டமன்ற உறுப்பினராக இல்லையெனில், 12 மாதங்களுக்குள் சட்டமன்ற உறுப்பினராக வேண்டும்.
3. முதலமைச்சரின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
மேற்கூறிய கூற்றுகளில் சரியானது/வை எது/எவை?
a. 1 மற்றும் 2 மட்டும் b. 1, 2 மற்றும் 3 c. 1 மட்டும்
d. 1 மற்றும் 3 மட்டும் e. விடை தெரியவில்லை

73. Consider the following pairs:

| Forms of government | | Country |
|---|---|---|
| 1. Oligarchy | - | former Soviet Union |
| 2. Autocracy | - | Saudi Arabia |
| 3. Aristocracy | - | United Kingdom |
| 4. Theocracy | - | Vatican |

How many pairs given above are correctly matched?
a. only one pair b. only two pairs c. only three pairs
d. All four pairs e. Answer not known
பின்வரும் இணைகளை ஆய்க.

| அரசாங்க அமைப்புகள் | | நாடு |
|---|---|---|
| 1. சிறு குழு ஆட்சி | - | முன்னாள் சோவியத் யூனியன் |
| 2. தனி நபர் ஆட்சி | - | சவுதி அரேபியா |
| 3. உயர்குடி ஆட்சி | - | ஐக்கிய பேரரசு |
| 4. மதகுருமார்களின் ஆட்சி | - | வாட்டிகன் |

மேற்கண்ட எத்தனை இணைகள் சரியாகப் பொருந்தியுள்ளன?
a. ஒரு இணை மட்டும் b. இரண்டு இணைகள் மட்டும்
c. மூன்று இணைகள் மட்டும் d. நான்கு இணைகளும்
e. விடை தெரியவில்லை

74. Consider the following pairs:

| Types of party system | | Country |
|---|---|---|
| 1. Single party system | - | UK |
| 2. Two party system | - | USA |
| 3. multi-party system | - | India |
| 4. multi-party system | - | Sri Lanka |

How many pairs given above are correctly matched?

a. only one pair
b. only two pairs
c. only three pairs
d. All four pairs
e. Answer not known

பின்வரும் இணைகளை ஆய்க.

| கட்சிமுறை வகைகள் | | நாடு |
|---|---|---|
| 1. ஒரு கட்சி முறை | - | ஐக்கிய பேரரசு |
| 2. இரு கட்சி முறை | - | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| 3. பல கட்சி முறை | - | இந்தியா |
| 4. பல கட்சி முறை | - | இலங்கை |

மேற்கண்டவற்றுள் எத்தனை இணைகள் சரியாக பொருந்தியுள்ளன?

a. ஒரு இணை மட்டும்
b. இரு இணைகள் மட்டும்
c. மூன்று இணைகள் மட்டும்
d. நான்கு இணைகளும்
e. விடை தெரியவில்லை

75. Consider the following statements:

1. Electoral system in India adopted from the system followed in united states of America.
2. VVPAT, NOTA were introduced in 2014 general election.
3. Election commission of India, at present, a one-member commission.

Which of the above statements is/ are correct?

a. 1 and 2 only
b. 2 only
c. 1 and 3 only
d. 1,2 and 3
e. Answer not known

பின்வரும் கூற்றுகளை ஆய்க.

1. இந்தியாவின் தேர்தல் முறை, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முறையிலிருந்து பெறப்பட்டது.
2. VVPAT மற்றும் NOTA, 2014 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்டது.
3. தற்போதைய இந்திய தேர்தல் ஆணையம், ஒரு நபர் ஆணையமாகும்.

மேற்கூறிய கூற்றுகளில் சரியானது/வை எது/எவை?

a. 1 மற்றும் 2 மட்டும்
b. 2 மட்டும்
c. 1 மற்றும் 3 மட்டும்
d. 1, 2 மற்றும் 3
e. விடை தெரியவில்லை

76. Consider the following statements regarding RTI, (Right to information Act)

1. It is a revolutionary act to promote transparency, enacted in October 2005.
2. Information must be provided within twenty days.
3. If reply is not given within time limit, an appeal can be filed with appellate authority.

Which of the above statement is/are correct?

a. 1 and 2 only
